**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

**அசல் வழக்கு எண்.597 /2024** **நாள்- 19.11.2025**

**வா.சா.2.முத்து குமார வேல்**

**குறுக்கு விசாரணை பிரதிவாதி தரப்பில்**

நான் டிப்ளமோ படித்துளளேன். நான் தற்போது கட்டிடம் கட்டும தொழில் செய்து வருகிறேன். நான் வெளிநாட்டில் 2010 ம் ஆண்டில் இருந்து 2019 ஆண்டுவரை வேலை பார்த்து வந்தேன். நிருபண வாக்கு முலத்தில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. வாதி பிரதிவாதி மீது சொத்து சம்பந்தமாக வழகது தாக்கல் செய்துளளார். எனது சொந்த ஊர் தென்காசி மாவட்டம் சங்கரன் கோவில் தாலுகா அருகன்குளம் என்றால் சரிதான். வாதியின் முகவரியை எனக்கு 8 வருடங்களாக தெரியும் . அருகன் குளத்திற்கும் இராஜபாளையத்திற்கும் சுமார் 25 கிலோ மீட்டர் துரம் இருக்கும். வாதி அரிசி வியாபாரம் செய்து வருவதால் எனக்கு பழக்கம். வாதி வீட்டில் வைத்து அரிசி வியாபாரம்செய்து வருகிறார். அதற்கு என்று தனியாக பேர் இல்லை . வாதியிடம் இருந்து அரிசி வாங்கியதற்கான ஆவணஙகள் தாக்கல் செய்யவில்லை. பிரதிவாதியை எந்தெந்த தேதிகளில் பார்த்தேன் என்று குறிப்பிட்டு நிரூபண வாக்குமூலத்தில் கூறவில்லை. வாதி பிரதிவாதியை எந்த தேதியில் அறிமுகப் படுத்தினார் என்று என் நிரூபண வாக்குமூலத்தில் கூறவில்லை. நான் இராஜபாளையம் ஆா. ஆர். நகரில் எந்த தெரு, எந்த கதவு எண் கொண்ட வீட்டில் குடியிருநது வருகிறேன் என்று தெரு, கதவு எண் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் ஆர். ஆர். நகரில் குடியிருநது வருவதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. வாதியும் பிரதிவாதியும் கிரைய ஒப்பந்த ம் செய்து கொண்ட தேதி எனக்கு தெரியுமா என்றால் 17.04.2023 ஆகும். கிழமை எனக்கு ஞாபகம் இல்லை. நான் அன்றைய தினம் அரிசி வாங்குவதற்காக சென்றேன். அப்போது வாதி பிரதிவாதி முனிஸ்வரன், பழனிக்குமார் ஆகியோர்கள் இருந்தோம். பழனிக்குமார் முனிஸ்வரன் ஆகியோர்களை என்க்க எவ்வாறு தெரியும் என்றும் யார் அறிமுகப்படுத்தினார்கள் என்ற என்னுடைய நிருபண வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தத்தை நான் படித்து பார்க்கவில்லை. முனிஸ்வரன் படித்து காண்பித்ததின் பேரில் தெரிந்து கொண்டேன்.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.

கிரைய ஒப்பந்தத்தை யார் எழுதினார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது. வீராச்சாமியின் குடும்ப விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். பிரதிவாதியின் குடும்ப விவரங்கள் எனக்கு தெரியாது. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் வாதி பிரதிவாதி கையெழுத்திடும் போது நான் நேரரிடயாக யபார்த்ததாகவோ நான் கையொப்பம் செய்ததை பிரதிவாதி பார்த்ததாக குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். கிரைய ஒப்பந்ததில் கண்டசொத்துபிரதிவாதிக்கு எவ்வாறு பாத்தியம் என்று எனக்கு தெரியாது. கிரைய ஒப்பந்தத்தில் வாதி பிரதிவாதி எதத்னை கையொப்பம் செய்தார் என்று எனக்கு தெரியாது வாதி பிரதிவாதி நான் மற்றவர்கள் அனைவரும ஒரே பேனாவில் தான் கையொப்பம் செய்தோம் . நான் வாதிக்காக வேண்டி நிரூபண வாக்கு்முலத்தில் கூறப்பபட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய் என்று சொன்னால் சரியல்ல. நானும் வாதியும் பிரதிவாதி கையொப்பத்தை மோசடியாக செய்து இந்த வழககை தாக்கல் செயது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதியையும் அவரது மருகனையும் நான் நேரடியாக பார்த்ததில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக கூறினேன் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.